# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 323 / 2012 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 6 |
| Name | : ராஜாராம். |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.06.2024.

- - - - - - -

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

நான் கட்ராம்பட்டியில் குடியிருந்தேன். நான் ஓட்டுனராக வேலை பார்க்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வதாக உள்ள கையெழுத்து என்னுடையதுதான். கடந்த 21.07.2011 ஆம் தேதியன்று போஸ் கடை முன்பு மாலை 6 மணிக்கு உசிம்பட்டி, காவல் சார்பு ஆய்வாளர் மற்றும் காவல் ஆய்வாளர் முன்பு கையெழுத்துப் போட்டேன். போலிசார் கடையில் நடந்த சம்பவத்திற்காக வந்து விசாரணை செய்தார்கள். வரைபடம் வரைந்தார்கள். அதற்கு சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னுடன் பொட்டல்பட்டியைச் சேர்ந்த ராமன் என்பவரும் கையெழுத்து செய்தார். அந்த பார்கை மகசர் அ.சா.ஆ.2 ஆகும். அதுபோன்று என்னிடம் காட்டப்படும் மற்றொரு கையெழுத்து அத்தாட்சியில் உள்ளது என்னுடையதுதான். மேற்படி கையெழுத்தை போலிசார்

போசின் கடையிலிருந்து ப்ரவுன் கலர் அட்டைப் பெட்டி ஒன்றும், டியூப் லைட் இரும்புச் சட்டத்தைக் கைப்பற்றினார்கள். அவர்கள் கைப்பற்றியது அடையாளமாக நானும், ராமரும் கையெழுத்துப் போட்டோம். அந்த அத்தாட்சியில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ-3 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை -

நான் கையெழுத்துப் போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதால் நான் கையெழுத்துச் செய்தேன் என்றால் சரிதான்.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 06.06.2024.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.